# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,673 — 1966 පෙබරවාරි 17 වැනි බ්‍රහස්පතින්දා — 1966.2.17

14,673 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 17 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேருகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | 31 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 32 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — | நாணுவிதம் .. .. .. | — |


## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### மட்டக்களப்புக்கு ஒரு மாநகர சபை அமைத்தல்

மட்டக்களப்புக்கு ஒரு மாநகர சபை அமைக்கப்பட வேண்டும் என்று கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் முடிவு செய்து அம்முடிபினைத் தொடர்ந்து பின்வரும் விஷயங்கள் பற்றி ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எஸ். தம்பித்துரை அவர்களை மகிழ்ச்சியுடன் ஆணையாளராக நியமித்துள்ளார் :—

(அ) தற்போதைய மட்டக்களப்பு நகர சபையின் பரிபாலன எல்லைகளுக்கு வெளியே உள்ளதும் அவசியமாஞல் உத்தேசிக்கப்பட்டுள்ள மாநகர சபைக்குள் சேர்க்கப்படக்கூடியதுமான பிரதேசம் ;

(ஆ) பிரதேசம், சனத்தொகை, ஏனைய அம்சங்களைக் கருத்திற் கொண்டு உத்தேச மட்டக்களப்பு மாநகர சபையில் எத்தனை அங்கத்தவர்கள் இருக்கவேண்டும் ;

(இ) உத்தேச மட்டக்களப்பு மாநகர சபையின் எல்லைகளின் வரையறை ;

(ஈ) உத்தேச மாநகர சபையின் ஒவ்வொரு வட்டாரத்தினதும் எல்லைகளின் வரையறை.

ஆணையாளரிடம் அறிக்கையிடும்படி வேண்டப்பட்ட அம்சங்களுள் அடங்கிய சகல விஷயங்களையும் பற்றியோ அல்லது ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றியோ கருத்துக்கள் தெரிவிக்க விரும்பும் சங்கங்கள் எவையுமோ அல்லது பொதுமக்களில் எவருமோ அப்படியான தமது கருத்துக்களை எழுத்தில், இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்கு, 1966 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ இடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தெரிவிக்கப்படும் எழுத்துமூலமான கருத்துக்கள் மூன்று பிரதிகளில் இருப்பதுடன் தட்டச்சிடப்பட்டிருப்பின் விரும்பத்தக்கதாகும்.

1966 ஆம் ஆண்டு மார்ச் 7 ம், 8 ம், 9 ம், 10 ஆம் திகதி தினமும் முற்பகல் 10.00 மணிக்கு மட்டக்களப்பு நகர சபை மண்டபத்தில் ஆணைச் சபை கூடி வாக்குமூலமான கருத்துக்களை மகிழ்ச்சியுடன் கேட்கும்.

மேற்கூறப்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக பொருத்தமான வாக்குமூலக் கருத்துக்கள் வெளியிட விருப்பமுள்ள அனைவரும் இதன்கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்கு தங்கள் பெயர், விலாசங்களை 1966 ம் ஆண்டு, பெப்ரவரி 28 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அவர்களின் வாக்குமூலக் கருத்துக்களைக் கேட்கும் திகதிகள் அவர்களுக்கு எழுத்தில் அறிவிக்கப்படும்.

பீ. எ. ஜே. காசிநாதர்,
செயலாளர்,
விசாரணை ஆணைக்குழு.

உ.உ.அ.கி.பி. (கீ) மேல்பார்த்து,
மட்டக்களப்பு,
1966 ம் ஞு பெப்புருவரி மீ 8 ந உ.

2–789—17.2.1966 ந் திகதிய வர்த்தமானி இல. 14,673

## முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறுவேண்டப்படுகிறது.

---

இத்தால் சகலரின் கவனத்திற்கும் கொண்டு வருவது யாதெனில், உற்பத்திச் செலவு கூடியதன் காரணமாக **இலங்கை அரசாங்க வர்த்தமானி**யின் விளம்பரக் கட்டணங்களைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. தற்போது நடைமுறையிலிருக்கும் ஒற்றைப்பந்தி அங்குலக் கட்டணம் ரூபா 10 ம் மேலதிக ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் ரூபா 10 ம் என்பதற்குப் பதில் **ஒரே கட்டணமாக ஒற்றைப்பந்தி அங்குலத்திற்கோ அன்றி அதன் பகுதிக்கோ ரூபா 15,** வியாபாரச் சின்னங்கள் தவிர்ந்த ஏனைய விளம்பரங்களுக்கு 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதி தொடக்கம் அறிவிடப்படும்.

பெர்னுட் டி சில்வா,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகம்,
கொழும்பு,
1966 ம் ஞு பெப்புருவரி மீ 11 ந உ.

# துணை விதிகள்

ஏல். டீ.—வி. 23/44

## இரத்தினபுரி நகரசபை

### நகரசபைக் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழும் 157 ம் பிரிவின் கீழும், இரத்தினபுரி நகரசபையால் ஆக்கப்பட்ட மேற்படி கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவின் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உப-விதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரக்காரியதரிசி,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1965 ம் ஆண்டு டிசம்பர் மீ 20 ந உ.

### உப-விதிகள்

1964 ம் ஆண்டு ஏப்ரல் 22 ம் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 14,016 கொண்ட அதிவிசேஷ கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட உப-விதியால் கடைசியாகத்திருத்தப்பட்ட 1944 ம் ஆண்டு, செப்தெம்பர் 15 ம் திகதியில் வெளியிடப்பட்ட 9,311 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட இரத்தினபுரிச் சந்தை உப-விதிகள், பின்வருமாறு இதனுல் மேலுந் திருத்தப்படுகின்றன :—

(1) அவற்றின் 6 வது உப-விதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய உப-விதியைச் சேர்த்துக்கொள்வதனுலும் ;

" 6 (1) இந்தத் துணைவிதிகளின் கீழ் தலைவரின் அதிகாரத்தால் அல்லது அதிகாரத்தின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டையுடையவராக அல்லது அத்தகைய உடையவரின் வேலைக்காரராக அல்லது முகவராக இருப்பதோடு அத்தகைய அனுமதிச் சீட்டின் நியதி நிபந்தனைக்ளையை ஒழுகுபவராகவும் இருந்தாலன்றி, எந்தவோராளும் பொதுச் சந்தையிலுள்ள எந்த ஒரு விற்பனைக்கூடம் இருக்கை அல்லது வெளியிடத்திலும் இருக்கவோ அதனைப் பயன்படுத்தவோ கூடாது.

(2) முதலாம் பந்தியில் குறிக்கப்பட்ட ஒவ்வொரு அனுமதிச்சீட்டும், பொருளளவில் இங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் 1 ம் பாகத்தில் உள்ள மாதிரிப்படிவத்தில் உள்ளபடி இருத்தல் வேண்டும்.

(3) இங்கே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் 2ம் பாகத்தில் விவரிக்கப்பட்ட விகிதப்படி, அனுமதிச்சீட்டுப் பெற்ற ஒவ்வொருவரும் கட்டணம் அல்லது வாடகை கொடுத்தல் வேண்டும்.

(2) இங்கே கொடுக்கப்பட்டுள்ள அ என்னும் அட்டவணையின் 1ம் பகுதியில் உள்ள "மேற் குறிக்கப்பட்ட கட்டணத்தைப் பெற்றுக் கொண்டேன்" என்ற சொற்றொடர்களையும், "காசுக்கணக்கர்" என்ற சொல்லையும் நீக்கிக்கொள்வதனுலும்,

(3) அ என்னும் அட்டவணையின் 1 ம் பகுதிக்கு நேர்பின்னே பின் வருவனவற்றைச் சேர்ப்பதனுலும் :—

### பகுதி 2

#### விகிதங்கள்

| அனுமதிச்சீட்டு | | | மாதாந்த வாடகை அல்லது கட்டணம் ரூபா |
|---|---|---|---|
| மாட்டிறைச்சிச்சாலை இல. 1 | .. | .. | 275 00 |
| மாட்டிறைச்சிச்சாலை இல. 2 | .. | .. | 275 00 |
| மாட்டிறைச்சிச்சாலை இல. 3 | .. | .. | 275 00 |
| ஆட்டிறைச்சிச்சாலை இல. 1 | .. | .. | 175 00 |
| ஆட்டிறைச்சிச்சாலை இல. 2 | .. | .. | 175 00 |
| கோழிச்சாலை | .. | .. | 45 00 |
| பண்டியிறைச்சிச்சாலை | | .. | 7 50 |
| மீன்சாலை இல. 1 | .. | .. | 150 00 |
| மீன்சாலை இல. 2 | .. | .. | 150 00 |
| மீன்சாலை இல. 3 | .. | .. | 150 00 |
| மரக்கறிச்சாலை இல. 1 | .. | .. | 30 00 |
| மரக்கறிச்சாலை இல. 2 | .. | .. | 18 00 |
| மரக்கறிச்சாலை இல. 3 | .. | .. | 18 00 |
| மரக்கறிச்சாலை இல. 4 | .. | .. | 20 00 |
| மரக்கறிச்சாலை இல. 5 | .. | .. | 40 00 |
| மரக்கறிச்சாலை இல. 6 | .. | .. | 18 00 |
| மரக்கறிச்சாலை இல. 7 | .. | .. | 18 00 |
| மரக்கறிச்சாலை இல. 8 | .. | .. | 45 00 |

(4) அதற்குள்ள (இ) என்னும் அட்டவணையின் (ஈ) என்னும் விஷயத்தில் குறிக்கப்பட்டிருக்கும் "48 சதுர அடிக்கு மேற்பட" என்ற வார்த்தைகட்கும் புள்ளிகட்கும் பதிலாக "48 சதுர அடிக்கு மேற்பட்டும் 60 சதுர அடிக்கு மேற்படாமலும்" என்ற வார்த்தைகளையும் புள்ளிகளையும் சேர்ப்பதனுலும்."

2–780—17.2.1966 ந திகதிய வர்த்தமானி இல. 14,673

---

## களனி பட்டின சபை

### பட்டின சபைக் கட்டளைச் சட்டம்

(256ம் அத்தியாயமான) பட்டின சபைக் கட்டளைச் சட்டத்தின் 152 ம் பிரிவின் கீழும் 156 ம் பிரிவின் கீழும் களனிப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ், தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட உப-விதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொரகொட,
நிரந்தரக் காரியதரிசி,
உள்ளூர் ஆட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ஆண்டு ஜனவரி மீ 29 ந உ.

### உப-விதிகள்

I. பின்வரும் தொழில்கள், அபாயம் விளைக்குந் தொழில்களெனக் கருதப்படும் :—

1. (ஐந்துபேர் அல்லது அதிகமானோர்) செம்பாருக்கல் பரல்கள் எடுக்க அகழ்தல்.
2. கருங்கல் எடுக்க அகழ்தல் அல்லது கருங்கல் உடைத்தல்.
3. வியாபாரத்திற்கு கொப்பரு இருப்பில் வைத்திருத்தல்.
4. உலர்த்திய தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல்.
5. காரீயம் பதனிடுதலும இருப்பில் வைத்திருத்தலும்.
6. இயந்திர சாதனம் மூலம் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்.
7. எண்ணெய் ஊற்றுவதற்குச் செக்கு வைத்து நடாத்துதல்.
8. தும்பு உற்பத்தி செய்தலும் இருப்பில் வைத்திருத்தலும்.
9. செம்பாருக்கல், பருத்தி நூல், ஏனைய நூல் அல்லது இவைபோன்ற ஏனைய பொருட்கள் இருப்பில் வைத்திருத்தல்.
10. ஆபரணம் உற்பத்தி செய்தல்.
11. அரிசி ஆலை வைத்து நடாத்துதல்.
12. நெல் குத்தும் பொறி வைத்து நடாத்துதல்.
13. வாயுப்பானத் தொழிற்சாலை வைத்து நடாத்துதல்.
14. பொறி முறையில் இயக்கப்படும் சாதனமுள்ள ஓர் வேலைத்தலம் வைத்து நடாத்துதல்.
15. மண்ணெண்ணெய் இருப்பில் வைத்திருத்தல்.
16. தீப்பெட்டி உற்பத்தி செய்தல்.
17. தீப்பெட்டி உற்பத்தி செய்யத் தேவையான மூலப் பொருட்களை இருப்பில் வைத்திருத்தல்.
18. ஓர் ஒளிப்பட நிலையம் வைத்து நடாத்துதல்.
19. வீட்டுத்தளவாடக் கடை ஒன்று வைத்து நடாத்துதல்.
20. 5 திற்கு மேற்பட்ட ஆட்களை வைத்து வீட்டுத்தளவாடம் உற்பத்தி செய்தல்.
21. அச்சுயந்திரசாலை வைத்து நடாத்துதல்.

II. பின்வருவன அருவருப்பு உண்டாக்குந் தொழில்களெனக் கருதப்படும் :—

1. மூன்று அந்தருக்கு மேற்பட்ட அளவில் கருவாடு அல்லது உப்பிட்ட மீன் இருப்பில் வைத்திருத்தல்.
2. மொத்த வியாபாரத்திற்கென பழுதடையத்தக்க உணவுப் பொருட்களை இருப்பில் வைத்திருத்தல்.
3. செயற்கை உரம் உற்பத்தி செய்தல்.
4. வினாகிரி உற்பத்தி செய்தல்.
5. சவற்காரம் உற்பத்தி செய்தல்.
6. தோல் பதனிடும் தொழிற்சாலை வைத்து நடாத்துதல்.
7. பாக்குப்பதனிடுதல்.
8. மிருக இரத்தம் அல்லது கழிவு இறைச்சி கொதிக்க வைத்தல்.
9. தோல் வகை இருப்பில் வைத்திருத்தல்.
10. எலும்பு வகை இருப்பில் வைத்திருத்தல்.
11. மீனுக்கு ஐஸ் இடுதல்.
12. நீரில் நனைந்து மரம் பதனிடல்.
13. தகட்டு ரப்பர் அல்லது கிரேப் ரப்பர் பதனிடல்.
14. ரப்பர் உற்பத்தி செய்தல் அல்லது ரப்பர் சுத்தஞ் செய்தல்.
15. செயற்கை உரம், கலவைப் பசளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான மூலப் பொருட்களை 3 மூட்டைக்கு மேலதிகமாக இருப்பில் வைத்திருத்தல்.
16. சோடா உற்பத்தி செய்தல்.
17. புகையிலை உலர்த்திப் பாடம் பண்ணுதல்.

18. சுருட்டு உற்பத்தி செய்தல்.
19. கள் சேர்த்து வைக்கும் நிலையம் வைத்து நடாத்துதல்.
20. பாணி, பனங்கட்டி, கருப்பட்டி உற்பத்தி செய்தல்.
21. பீடி உற்பத்தி செய்தல்.
22. கொப்பரு உலர்த்துதல்.
23. விறகுசாலை வைத்து நடாத்துதல்.
24. ஒட்சிசன் வாயு உபயோகிக்கப்படும் வேலைத்தலம் வைத்து நடாத்துதல்.
25. மின்கலவடுக்கு மின்ஊட்டல்.
26. தேங்காய் மட்டை நனைய விடுவதற்கு நீர்க்குட்டை வைத்து நடாத்துதல்.
27. மரக்காலை வைத்து நடாத்துதல்.
28. கம்மாலை அல்லது பட்டடை, உலை வைத்து நடாத்துதல்.

III. பின்வருவன அருவருப்பும் அபாயமும் விளைக்குந் தொழில்களெனக் கருதப்படும் :—

1. சுண்ணம்புச் சூளை வைத்தலும் இருப்பில் சுண்ணம்பு வைத்திருத்தலும்.
2. தும்பு, கயிறு சாயம் இடுதல்.
3. ஓடு அல்லது செங்கல் உற்பத்தி செய்தல்.

2–786—17.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,673

---

## சங்கானைப் பட்டினம்

### பட்டினசபைகள் கட்டளைச் சட்டம்

சங்கானைப் பட்டினசபை (256 ஆம் அத்தியாயமான) பட்டினச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு அவரால் அங்கீகரிக்கப் பட்ட துணை விதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1966 ம் ஆண்டு ஜனவரி மீ 29 ந் உ.

### துணைவிதிகள், ஆயுள்வேத மருந்துச்சாலைகள்

1. (256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 128 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட ஆயுள்வேத மருந்துச்சாலை, சபையால் தாபரிக்கப்பட்டு 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுள்வேதச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வைத்தியர் ஒருவரின் பொறுப்பில் இருத்தல்வேண்டும்.

2. துணைவிதி 1 இல் சொல்லப்படும் வைத்தியர் அல்லது சபையால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட வேறு உத்தியோகத்தர் எவரும், சபையால் விதிக்கப்படுகின்றபடியான ஆயுள்வேத மருந்துச்சாலை சம்பந்தப்பட்ட கணக்கேடுகளையும் ஏனைய பதிவேடுகளையும் சபையால் அங்கீகரிக்கப்படும் அதே மாதிரியிலும் அதே முறையிலும், வைத்திருக்க வேண்டும்.

3. சபை, ஆயுள்வேத மருந்துச்சாலையின் பராமரிப்புக்கு வேண்டிய நிதிகளை உள்ளூர் நிதியிலிருந்து ஆண்டுதோறும் ஒதுக்கலாம்; சங்கானைப் பட்டினத்தின் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் அல்லது சபையால் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்படும் குறை நிரப்பு மதிப்பீடுகளில், அத்தகைய ஒதுக்கீட்டுக்கான ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.

4. ஆயுள்வேத வைத்தியசாலையில், வைத்தியம் இலவசமானதாயும் சங்கானைப் பட்டின வாசிகளுக்கு மட்டுமே செய்யப்படுவதாயும் இருத்தல் வேண்டும்.

5. டிசெம்பர் 31 இன் முடியும் வருடம் ஒவ்வொன்றினதும் இறுதியில் ஆயுள்வேத மருந்துச்சாலையின் அவ்வருடத்து வரவு செலவுகளைக் காட்டும் கூற்று ஒன்று தயாரிக்கப்படத் தலைவர் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

6. இத்துணை விதிகளில்—

"ஆயுள்வேத மருந்துச்சாலை" என்பது சபையால் தாபிக்கப்பட்டுத் தாபரிக்கப்படும் ஆயுள்வேத மருந்துச்சாலை எனப் பொருள் படும்.

"சபை" என்பது சங்கானைப் பட்டினசபை எனப் பொருள்படும்.

"தலைவர்" என்பது சங்கானைப் பட்டினசபையின் தலைவர் எனப் பொருள்படும்.

2–779—17.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,673

---

## சுன்னாகம் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 (3) ஆகிய பிரிவுகளின் கீழ் சுன்னாகம் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 1966 ம் ஆண்டு ஜனவரி மீ 29 ந் உ.

### வாகன, மிருகவரி பற்றிய துணைவிதிகள்

1. வாகன, மிருகவரி சம்பந்தமானவையும் 1946, ஒக்ரோபர் 4 இன் 9,609 ஆம் இலக்கக் கசெற்றில பிரசுரிக்கப்பட்டவையுமான விதிகளின் 211ஆம் விதியின் கீழ் கொடுகப்படுமாறு வேண்டப்படும் அட்டவணை கொடுக்கப்படலாகாது.

2. கட்டளைச் சட்டத்தின் 161ஆம், 162ஆம் பிரிவுகளின் கீழ், வாகனங்கள், மிருகங்களின் பொருட்டு சபையால் விதிக்கப்படும் ஆண்டுவரி, ஆண்டுதோறும் மார்ச் மாதம் முதல் நாளன்று அல்லது அதற்கு முன் சபையின் கந்தோரினில் கொடுக்கப்பட வேண்டும்.

3. (1) ஆண்டு வரி கொடுக்கப்பட்டுள்ள வாகனம் ஒவ்வொன்றின் பொருட்டும், இதற்குள்ள அட்டவணையில் குறித்துள்ள வாகனங்களைப் பிரித்துக்காட்டும் எழுத்துகளில் அந்த வாகனத்துக்குப் பொருத்தமான எழுத்துகளையும் அத்தகடு எந்த ஆண்டுக்கு வழங்கப்படுகின்றதோ அந்த ஆண்டைக்குறிக்கும் இலக்கங்களையும் வாகனங்களின் பதிவேட்டிலுள்ள உரிய எண்ணையும் உடைய உலோகத்தகடு ஒன்றை தலைவர் வழங்குதல் வேண்டும் அல்லது வாங்குவித்தல்வேண்டும்.

(2) பந்தி (1) இன் கீழ் வழங்கப்படும் தகடு எதுவும் உபயோகத்தினாலேனும் வேறு விதத்திலேனும் தெளிவின்றிப்போயின் அல்லது உருவழிந்துபோயின் அத்தகட்டின் சொந்தக்காரர் அதனைத் தலைவரிடம் திருப்பிக்கொடுத்து இருபத்தைந்து சதமும் கொடுக்கும்போது புதிய தகடு ஒன்றைப் பெறும் உரித்துடையவராவார்.

(3) பந்தி (1) இன் கீழ் வழங்கப்படும் தகடு எதுவும் இழக்கப்பட்டிருக்கின்றது அல்லது களவாடப்பட்டிருக்கின்றது என்று, தலைவர், சத்தியக் கடதாசி மூலமாகவேனும் வேறு வகையிலேனும் திருப்தியடைவாரேல் அத்தகட்டின் சொந்தக்காரர் விண்ணப்பஞ் செய்து ஐம்பது சதமும் கொடுக்குங்கால் அச்சொந்தக்காரருக்கு ஒரு புதிய தகட்டை வழங்கலாம்.

4. (1) துணைவிதி (3) இன் கீழ் ஒரு தகடு வழங்கப்பட்டுள்ள வாகனம் எதையும் தமது ஆட்சியில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர் அந்தத்தகட்டை அந்த வாகனத்தில் ஒரு துலக்கமான பகுதியில் பொருத்திவைப்பிக்க வேண்டும்.

(2) இத்துணை விதியின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளை மீறும் ஒவ்வொருவரும் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத தண்டத்தால் தண்டிக்கத்தக்க ஒரு குற்றம் புரிந்த குற்றவாளியாவார்.

5. எந்த வாகனத்தின் மீதும் பொருத்தப்பட்டிருக்க வேண்டுமென்று 4 (1) ஆம் துணைவிதியால் வேண்டப்படும் உலோகத் தகட்டைப் பரிசோதித்தற் பொருட்டு அவ்வாகனத்தை நிறுத்துதல் தலைவருக்கேனும் அவரால் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட எவருக்குமேனும் சட்ட முறையானதாகும். அவ்விதம் செய்யும்படி கேட்கப்படுங்கால் ஒரு வாகனத்தின் சாரதி அந்த வாகனத்தை நிறுத்தி அத்தகைய பரிசோதனையை அனுமதிக்கவும் அதற்கு உதவவும் வேண்டும்.

6. இத்துணை விதிகளில்—

"தலைவர்" என்பது சபைத் தலைவரைக் கருதும்;

"சபை" என்பது சுன்னாகம் பட்டின சபையைக் கருதும்;

"கட்டளைச் சட்டம்" என்பது (256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தைக் கருதும்.

### அட்டவணை

| | |
|---|---|
| வியாபாரமல்லாத வேறு தேவைகளுக்கு உபயோகிக்கப்படும் சைக்கிள் ஒன்றுக்கு .. | சு.ப.இ. |
| வியாபார நோக்கங்களுக்கு உபயோகிக்கப்படும் சைக்கிள் ஒன்றுக்கு .. | சு.ப.து.வி. |
| ஒற்றை மாட்டுவண்டி ஒன்றுக்கு .. | சு.ப.ஒ. |
| இரட்டை மாட்டுவண்டி ஒன்றுக்கு .. | சு.ப.இ. |
| வாடகைக்கு விடுதற்கு உபயோகிக்கப்படும் ஒற்றை மாட்டு வண்டி ஒன்றுக்கு .. | சு.ப.ஒ.வா |
| வாடகைக்கு விடுதற்கு உபயோகிக்கப்படும் இரட்டை மாட்டு வண்டி ஒன்றுக்கு .. | சு.ப.இ.வா |
| றிக்ஷோ ஒன்றுக்கு .. | சு.ப.றி. |
| கைவண்டி ஒன்றுக்கு .. | சு.ப.கை |

2–781—17.2.66 ந் திகதிய வர்த்தமானி இல. 14,673

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய கிரய விகிதங்கள்

## " இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்) "

வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு,** அவர்களுக்கு நேரில் அல்லது தபால்மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும் மற்றும் நாட்களில் மு. ப. 9 மணிமுதல் பி. ப. 4.30 மணிவரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல், விசேஷமாக மைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுபடவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரறுல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 15 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி ... ... | 15 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 165 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் ... ... | 330 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமைதோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.8.63 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 27 50 | 40 50 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 17 50 | 23 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் ... ... ... | 25 0 | 33 0 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக்கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

| **தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்** | விலை சதம் | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 30 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப்பின் ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 60 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 15 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு கிழமைக்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் ... ... | 30 | 15 |

**இவைகளின் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை, அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற்பெட்டி 500, கொழும்பு, என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான் முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் **வர்த்தமானி** வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.**

**அட்டவணை—1966**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | 4. 3.66 | வெள்ளி | 25. 2.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 11. 3.66 | வெள்ளி | 4. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 18. 3.66 | வெள்ளி | 11. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 25. 3.66 | வெள்ளி | 17. 3.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| **ஏப்பிறல்** | 1. 4.66 | வெள்ளி | 25. 3.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 7. 4.66 | வியாழன் | 31. 3.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 15. 4.66 | வெள்ளி | 1. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22. 4.66 | வெள்ளி | 15. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29. 4.66 | வெள்ளி | 22. 4.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **மே** | 6. 5.66 | வெள்ளி | 26. 4.66 | செவ்வாய் | நண்பகல் | 12 |
| | 13. 5.66 | வெள்ளி | 6. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20. 5.66 | வெள்ளி | 13. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27. 5.66 | வெள்ளி | 20. 5.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **யூன்** | 3. 6.66 | வெள்ளி | 25. 5.66 | புதன் | நண்பகல் | 12 |
| | 9. 6.66 | வியாழன் | 1. 6.66 | புதன் | நண்பகல் | 12 |
| | 16. 6.66 | வியாழன் | 9. 6.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 24. 6.66 | வெள்ளி | 16. 6.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| **யூலை** | 1. 7.66 | வெள்ளி | 24. 6.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 8. 7.66 | வெள்ளி | 1. 7.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 15. 7.66 | வெள்ளி | 8. 7.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| | 22. 7.66 | வெள்ளி | 14. 7.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 29. 7.66 | வெள்ளி | 22. 7.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஓகத்து** | 5. 8.66 | வெள்ளி | 29. 7.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12. 8.66 | வெள்ளி | 5. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19. 8.66 | வெள்ளி | 12. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26. 8.66 | வெள்ளி | 19. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **செத்தெம்பர்** | 2. 9.66 | வெள்ளி | 26. 8.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9. 9.66 | வெள்ளி | 2. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16. 9.66 | வெள்ளி | 9. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 23. 9.66 | வெள்ளி | 16. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30. 9.66 | வெள்ளி | 23. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| **ஒக்ரோபர்** | 7.10.66 | வெள்ளி | 30. 9.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 14.10.66 | வெள்ளி | 7.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 20.10.66 | வியாழன் | 14.10.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 27.10.66 | வியாழன் | 20.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| **நவெம்பர்** | 3.11.66 | வியாழன் | 27.10.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 10.11.66 | வியாழன் | 3.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 18.11.66 | வெள்ளி | 10.11.66 | வியாழன் | நண்பகல் | 12 |
| | 25.11.66 | வெள்ளி | 18.11.66 | வெள்ளி | நண்பகல் | 12 |
| **திசெம்பர்** | 2.12.66 | வெள்ளி | 24.11.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 9.12.66 | வெள்ளி | 2.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 16.12.66 | வெள்ளி | 8.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 23.12.66 | வெள்ளி | 16.12.66 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 30.12.66 | வெள்ளி | 22.12.66 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகம், கொழும்பு,
1966 ம் ஆல் பெப்புருவரி மீ 11 ந உ.

**பேர்னட் த சில்வா,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை, வாழைச்சேனை சஸ்ரேண பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற பதிப்பிக்கப்பெற்றது.